www.tamilarangam.net

# அகிம்சைப் போராளிகள் ஆயுத முனையில் பலாத்காரமாகக் கடத்தப்பட்டனர்

***இந்த இழி செயலைத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.***

தமிழ் மக்களின் ஒவ்வொரு போராட்ட வடிவமும் ஒவ்வொரு அரசியல் முன்னெடுப்புகளே, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் படிக்கட்டுகளே. பல்வேறு பட்ட தரப்பினரும் தமது அடிப்படைப் பிரச்சனைகளை முன்வைத்து நடாத்தும் போராட்டங்கள் அவரவர் சக்திக்குட்பட்டதே. முற்போக்கான போராட்ட வடிவங்கள் அனைத்தையும் முழுமையான புரட்சியை நோக்கி நெறிப்படுத்தி தேசிய விடுதலையை நோக்கி இட்டுச் செல்வதே சரியான புரட்சியை முன்னெடுப்பவர்களின் கடமையாகும். இவற்றைப் [புரிந்து கொள்ள முடியாத தெளிவான சிந்தனையற்ற தீவிரவாதக் கூட்டம் ஆயுத முனையில் அறவழிப் போராளிகளை பலாத்காரமாக கடத்திச் சென்றுள்ளனர். இது தனி மனிதன் ஒருவன் சொந்த அடிப்படைச் சனநாயக உரிமைக்காகப் போராடுவதனைக் கூட மறுக்கும் இழி செயலாகும். தமிழ் மக்களின் புரட்சிகரப் போராட்டப் படிகளில் அழிக்க முடியாத கறை இதுவாகும்.

இதற்குப் பின்னணி யார்? இவர்களின் நோக்கம் என்ன? இதன் மூலம் இவர்கள் முன்வைக்கும் தீர்வு தான் என்ன? ஒன்பது உயிர்களுக்குப் பதிலாக தொண்ணூறு உயிர்கள் மீண்டும் போராட்டத்தில் குதித்தால் இவர்களால் என்ன செய்ய முடியும்? இந்த பிற்போக்கான வெறுக்கத்தக்க செயலைப் புரிந்தவர்களின் உண்மையான நோக்கம் சந்தேகத்திற்கு உரியதே ...... ......

ஜூலை வன்முறைச் சம்பவங்களின் நெருக்கடிக்குத் தற்காலிகத் தீர்வாக நடாத்தப்படும் சர்வகட்சி மாநாட்டில் அரசு தரப்புப் பயங்கர வாதிகட்கும் தமிழ் மக்களின் தரப்பு கூட்டணிப் பிற்போக்கு வாதிகளுக்கும் இடையே பெரும் தலையிடியாக முளைத்தது இந்தப் போராட்டமாகும். இப்போராட்டம் முழு மக்களின் ஆதரவுடன் எதிர்தரப்புப் பிற்போக்குக் கும்பல்களை கிலி கொள்ளச் செய்திருந்தது. இதற்கு முடிவு கட்டுவது எப்படி என்று அவர்கள் மண்டையை உடைத்துக் கொண்டிருக்கையில் இவர்களது மண்டையிடிக்கு இதமான மருந்தாகத்தான் இச் செயல் செய்யப்பட்டுள்ளது என்று நாம் கருதுகிறோம்.

கேலிக்கிடமாகிவிட்ட இப் போராட்டத்தினைப் பார்த்து இதுதான் தருணம் எனப் பேச்சுவார்த்தை நடாத்தும் எதிரிகளும் பிற்போக்குக் கும்பல்களும் கைகொட்டிச் சிரிப்பார்களே; அப்போது இவர்கள் எங்கே போய் மறையப் போகின்றனர் அல்லது அர்த்தமற்ற நியாயப் படுத்தல்களை முன்வைக்கப் போகின்றார்களா?

எங்கெங்கு ஆயுதம் பாவிப்பது என்றே தெரியாத, தெளிவற்றவர்களுக்கு ஏன் இந்த ஆயுதங்கள்? புரட்சி விடுதலை என்ற வேடங்கள் தான் இவர்கட்கு ஏன்? இவர்கள் என்ன விடுதலைப் போரரட்டத்தைத் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்களா?

முழுக்க முழுக்க நியாயமானதும் பேரினவாத அரசினது அரக்கத்தனத்தையும், பாரபட்சத்தையும், காட்டுவதும், உலக மட்டத்தில் மேலும் மேலும் இவ் அரசை அம்பலப்படுத்துவதும், கூட்டணியின் இயலாத்தனத்தையும் தோலுரித்துக் காட்டுவதுமான பல்வேறு முற்போக்கு அம்சங்களைக் கொண்ட இவ் அகிம்சைப் போராட்டத்தைப் பலாத்காரமாக ஆயுத முனையில் கேவலப்படுத்திய, கேலிக்கிடமாக்கிய காட்டிக் கொடுக்கும், பிற்போக்குக் கும்பலை, சதிகாரர்களை, எதிர்ப் புரட்சியாளர்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இப்படியான செய்கைகளைப் பற்றித் தமிழ் மக்கள் கனவு கூடக் கண்டிருக்கமாட்டார்கள்

இந்தக் கும்பல் யாராக இருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டியவர்களே! இவர்களை மக்கள் இனம் கண்டு கொள்ள வேண்டும். தமிழ் மக்களது அரசியல் வரலாற்றில் திட்டவட்டமாக இவர்கட்கு இடம் கொடுக்கக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும். ஸ்ரீலங்கா அரசும் கூட்டணிச் சந்தர்ப்ப வாதிகளும் தொடர்ந்தும் குதூகலமாய்ப் பேசிக்களிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கையே இது என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

*18-1-1984*

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்
(PLO-T)

இத்துண்டுப் பிரசுரம் தமிழீழ மக்கள் விடுதலைக் கழக அரசியல்த் துறைச் செயலரால் வெளிவரப் பெற்றது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்